# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
# பட்டப்பின் கற்கைகள் பீடம்
# முதுமாணிக் கற்கை நெறி - 2024/2025
# Master of Arts (M.A) - 2024/2025

கிழக்குப் பல்கலைக்கழக பட்டப்பின் கற்கைகள் பீடத்தின் முதுமாணிக் கற்கை (**தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும் மற்றும் புவியியல்**) நெறிக்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள் :**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றில் விண்ணப்பிக்கும் பாடத்தில் பெறப்பட்ட சிறப்புக் கலைமாணிப்பட்டம் **அல்லது**,

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனமொன்றில் பெறப்பட்ட விண்ணப்பிக்கும் பாடத்தை உள்ளடக்கிய வகுப்புச் சித்தியுடனான பொதுக் கலைமாணிப்பட்டம்.

**குறிப்பு** : விண்ணப்பிக்கும் பாடத்தை உள்ளடக்கிய பொதுகலைமாணிப் பட்டத்தில் வகுப்புச்சித்தி இல்லாதவர்கள் பட்டப்பின் கற்கைகள் பீடத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தி பெற வேண்டும்.

1. **தெரிவு முறை** : தகுதிகாண் பரீட்சையும், நேர்முகப் பரீட்சையும்
2. **பாடநெறிக்கட்டணம்** : ரூபா 170,000.00
3. **காலம்** : 1 வருடம் (முழு நேரக் கற்கை நெறி)
4. **விண்ணப்ப முடிவுத்திகதி** : 31.08.2024
5. **மொழி மூலம்** : தமிழ் / ஆங்கிலம்

**குறிப்பு** : புவியியல் பாட நெறி மாத்திரம் தமிழ் மொழி மூலமும், ஆங்கில மொழி மூலமும் கற்பிக்கப்படும்.

பின்வரும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் ரூ.3000.00 ஐ நிதியாளர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கம் 227100190000390 மக்கள் வங்கி செங்கலடியில் வைப்பிலிட்டு அதன் பற்றுச்சீட்டுடன் 9'' X 6'' அளவுடைய ரூபா 110.00 இற்கான முத்திரை ஒட்டப்பட்டு சுய விலாசமிடப்பட்ட கடித உறையையும் இணைத்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் **சிரேஸ்ட உதவிப் பதிவாளர் / பட்டப்பின் கற்கைகள் பீடம் , கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை, வந்தாறுமூலை, செங்கலடி** எனும் முகவரிக்கு 31.08.2024 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்ப படிவங்களை தரவிறக்கம் செய்வதற்கும் கிழக்குப் பல்கலைக்கழகம், பட்டப்பின் கற்கைகள் பீட இணையத்தளத்தினை பார்வையிடவும். (http:/www.esn.ac.lk )

பதிவாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,
வந்தாறுமூலை,
செங்கலடி.

tamilguru.lk